ஒரு துணைக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். குறிப்பாக, அவருடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், இரண்டே இரண்டு ஊராட்சிகள்தான் இந்தத் துறையின் சார்பிலே இருக்கின்றன. அதிலும், குறிப்பாக, தற்போது தாம்பரம் நகராட்சியை மாநகராட்சியாக அறிவித்துள்ள இந்தச் சூழ்நிலையில், அந்தப் பகுதிகள் மாநகராட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இருக்கின்ற அந்த இரண்டு ஊராட்சிகளில் மக்கள்தொகை அதிகம் இருக்கின்றது என்பதை உணர்ந்து, குறிப்பாக விமான நிலையம் போன்ற கேந்தரமான பகுதிகள் அங்கே அமைந்திருக்கின்ற காரணத்தால், நம்முடைய நகர்ப்புர வளர்ச்சித் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து அந்தத் தேவைகளை பூர்த்தி செய்யும் என்ற உறுதியைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***517—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சி, ஆயிரப்பேரியில் கால்நடை

மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்க வேண்டியதன் அவசியம் எதுவும் தற்போது எழவில்லையெனத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பழனி நாடார் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால், பக்கத்து மாவட்டம், சிவகாசி தொகுதி சார்பாக, அவருக்காகப் பேசுகின்றேன். அந்தப் பகுதியில் 30 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அந்தப் பகுதி Foothills of the Western Ghats, மலைப் பகுதியாக இருப்பதால், அவர்களுடைய வாழ்வாதாரம் முழுவதும் ஆடு, மாடு, கோழி வளர்ப்புதான். அந்த அடிப்படையில், Southwest monsoon, Northeast monsoon மூலம் அந்தப் பகுதியில் மழையும் அதிகம் பொழியும். அதேபோன்று, தற்போது தென்காசி ஒரு புது மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது வளர்ந்து வருகின்ற மாவட்டம். அங்கு Business community–யும் அதிகம் கிடையாது. விவசாயத்தையும், கால்நடையையும் மட்டும்தான் மக்கள் நம்பியிருக்கின்றார்கள். அதனால், அந்தப் பகுதியில் உள்ள கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, Medical College ஒன்று கட்டாயமாக அந்தப் பகுதியில் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டு, இருக்கையில் அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

திரு. G. அசோகன்: அந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியிலிருந்து 60

[2021 செப்டம்பர் 1

கிலோ மீட்டர் தொலைவில் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளதால், தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரியில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தற்போது அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, சின்னக்கோவிலங்குளம் பகுதியில் ரூ.2 கோடியே 70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் உயர் மரபணு திறன்கொண்ட கன்னி மற்றும் குட்டையான, வெள்ளாடு உற்பத்தியில் மரபணு ஆராய்ச்சி, பசுந்தீவன உற்பத்தி முதலியவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் வகையில் வெளிநாட்டு ஆராய்ச்சி நிலையம் நிறுவுவதற்கு ஆணை வெளியிடப்பட்டு, ஆரம்பக் கட்டடப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மூன்றாவது முறையாக எனது தொகுதி சார்ந்த கேள்வியை எழுப்புவதற்குக் காரணமாக இருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, எந்த பிற தொழிலையும் செய்ய இயலாத நிலையில், நூற்றுக்கு நூறு வேளாண் தொழிலைச் சார்ந்திருக்கும் தொகுதி. விவசாயம், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிரம்பியிருக்கிற தொகுதி. அருகிலிருக்கிற கும்பகோணம், மயிலாடுதுறை, பாபநாசம், சீர்காழி தொகுதிகளிலும் இதே நிலைதான். ஆயிரக்கணக்கான கால்நடைகள் இருந்தும், மருத்துவமனைகளுக்குத்தான் கால்நடைகளை அழைத்துச் செல்கிற சூழ்நிலை இருக்கிறதேதவிர, அது சம்பந்தப்பட்ட மேற்படிப்புக்குரிய கல்லூரிகள் ஏதும் இல்லை. எனவே, மாவட்டந்தோறும், கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று எண்ணுகிற நமது அரசு, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற திருவிடைமருதூர் தொகுதியில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அரசு தலைமைக் கொறடா, மரியாதைக்குரிய முனைவர் கோவி. செழியன் அவர்கள் தங்களுடைய பகுதியில் நிறைய கால்நடைகள் இருப்பதாலும், கால்நடை மருத்துவ நிலையங்கள் இருப்பதாலும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார்கள். அந்த வகையில், அதுகுறித்து துறையின்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, ஏறக்குறைய 80 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையை உள்ளடக்கிய தொகுதி. அங்கு புதூர் ஊராட்சி ஒன்றியம், முத்தலாபுரம் ஊராட்சியில் மிகப் பெரிய மாட்டுச் சந்தை 40 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்டது. 100 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள அந்த இடம் ஏற்கெனவே அரசாங்கத்தின் வசம் இருக்கிறது. வைப்பாறு* riverbed*–ல் அந்த இடம் அமைந்திருக்கிறது. தூத்துக்குடி மாவட்டத்திற்கென கால்நடை மருத்துவக் கல்லூரி இல்லை. தூத்துக்குடி மாவட்டத்தில் மிகப் பெரிய இரண்டு விவசாயப் பகுதிகள் இருக்கின்றன. அங்குள்ள மூன்று தொகுதிகளில் தாமிரபரணி தண்ணீர் பாய்கிற விவசாயமும், மூன்று பகுதிகளில்* rainfed agriculture*–ம் செய்யப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்ட பொறுப்பு வகிக்கின்றவர் மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். மாவட்டந்தோறும் கால்நடை மருத்துவக்*

கல்லூரிகளைக் கொடுத்து, விவசாயிகளுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதலைக் கொண்டுவரக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில், தூத்துக்குடி மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, முத்தலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட அந்த இடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மார்க்கண்டேயன் அவர்கள் பல்வேறு விளக்கங்களைச் சொல்லி, தங்களுடைய பகுதியிலே கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதுபோல, தூத்துக்குடி மாவட்டத்திற்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைய வேண்டுமென்ற வகையிலே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு, வரவிருக்கின்ற காலங்களில், அதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்றாற்போல், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

C.T. ஸ்கேன் வசதி

***307—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—